வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1936 /ஆ1/2022, நாள் : 15.06.2022

பொருள்: 'பள்ளிக் கல்வி – ஆசிரியர்களின் பணி சார்ந்த தேவைகள் இணையவழியில் பணிப்பலன்களைப் பெறுவதற்கான புதிய மின்னனு செயலி உருவாக்கப்பட்டது – பயன்பாட்டிற்கு கொண்டு வருதல் – தகவல் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை: சென்னை- 6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.001446/ /பிடி1/ இ1/2022. நாள்: 13.06.2022.

#######

பார்வையில் காணும் செயல்முறைக் கடிதத்திற்கிணங்க தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் பணிபுரியும் அரசு / அரசு உதவி பெறும் தொடக்க பள்ளிகள் / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளி ஆசிரியர்கள் தற்செயல் விடுப்பு, மருத்துவ விடுப்பு, ஈட்டிய விடுப்பு கோருதல், அனுமதி மற்றும் பிற பணி சார்ந்த தேவைகளுக்கு எழுத்துப்பூர்வமாக தங்கள் உயர் அலுவலர்களிடம் நேரடியாக சென்று விண்ணப்பித்து பயனடைந்து வந்தனர். அதனால் நேரடியாக விண்ணப்பிக்கும் முறையில் ஆசிரியர்களுக்கு சிரமங்களும் கால விரையமும் ஏற்படுகிறது. எனவே, இவ்வாரான சிரமங்கள் மற்றும் கால விரையத்தினை தவிர்க்கும் பொருட்டு 25.05.2022 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் ஆசிரியர்கள் அவர்தம் கைப்பேசி வாயிலாக தற்செயல் விடுப்பு, மருத்துவ விடுப்பு, ஈட்டிய விடுப்பு கோருதல், அனுமதி மற்றும் பிற பணி சார்ந்த தேவைகளுக்கு விண்ணப்பிக்கும் செயலி ஒன்று உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 2022-2023-ஆம் கல்வியாண்டிலிருந்து இந்த செயலி பயன்படுத்துவது குறித்த விளக்கம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

எனவே, ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்கள் அனைவரும் இனிவரும் காலங்களில் இச்செயலி மூலம் தங்கள் பணி சார்ந்த தேவைகள் / விடுப்புகளுக்கு விண்ணப்பித்து பயன் பெறுமாறு அறிவுறுத்திட சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு- படிவம்-1

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர்-6
   (தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது)
2. மாவட்ட கல்வி அலுவலர், வேலூர்.
   (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும்)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வே.மா.

நகல்- சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர்,
அவர்களுக்கு (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

E-Mail 13.06.2022

11.50 AM

B1/B2

**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-6**

**ந.க.எண்.001446 / பிடி1 / இ1 / 2022, நாள்.13.06.2022**

1936

பொருள்: பள்ளிக் கல்வி ஆசிரியர்களின் பணி சார்ந்த தேவைகள் இணையவழியில் பணிப்பலன்களைப் பெறுவதற்கான புதிய மின்னனு செயலி உருவாக்கப்பட்டது பயன்பாட்டிற்கு கொண்டு வருதல் – தகவல் தெரிவித்தல் சார்ந்து.

-----

13 JUN 2022

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் பணிபுரியும் அரசு / அரசு உதவி பெறும் / தொடக்க பள்ளிகள் / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளி ஆசிரியர்கள் தற்செயல் விடுப்பு, மருத்துவ விடுப்பு, ஈட்டிய விடுப்பு கோருதல், அனுமதி மற்றும் பிற பணி சார்ந்த தேவைகளுக்கு எழுத்துப்பூர்வமாக தங்கள் உயர் அலுவலர்களிடம் நேரடியாக சென்று விண்ணப்பித்து பயனடைந்து வந்தனர். அதனால் நேரடியாக விண்ணப்பிக்கும் முறையில் ஆசிரியர்களுக்கு சிரமங்களும் கால விரையமும் ஏற்படுகிறது. எனவே இவ்வாரான சிரமங்கள் மற்றும் கால விரையத்தினை தவிர்க்கும் பொருட்டு 25.05.2022 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் ஆசிரியர்கள் அவர்தம் கைபேசி வாயிலாக தற்செயல் விடுப்பு, மருத்துவ விடுப்பு, ஈட்டிய விடுப்பு கோருதல், அனுமதி மற்றும் பிற பணி சார்ந்த தேவைகளுக்கு விண்ணப்பிக்கும் செயலி TNSED-Schools (இணையவழியில் பணிப்பலன்களைப் பெறுவதற்கான செயலி) ஒன்று உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் கல்வியாண்டிலிருந்து இந்த செயலி பயன்படுத்துவது குறித்த விளக்கம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

எனவே ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்கள் அனைவரும் இனிவரும் காலங்களில் இச்செயலி மூலம் தங்கள் பணி சார்ந்த தேவைகள் / விடுப்புகளுக்கு விண்ணப்பித்து பயன் பெறுமாறு அறிவுறுத்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : செயலி விளக்க குறிப்பு

பள்ளிக் கல்வி ஆணையருக்காக

13/6/22

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:

1. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-6.
2. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை-6.
3. முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமை செயலகம், சென்னை-9.

D:\2022 Year Files\001446 PD1 2022.Docx

Scanned by TapScanner